## ஆதிக்கவாதிகளையும், அடிமைகளையும் எதிர்த்து வெல்வோம்!

# தீரன் சின்னமலை பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்!

### தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவில் உறுதி!

சென்னை, ஏப். 18-

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவில், பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாளில் ஆதிக்க வாதிகளையும், அடிமைகளையும் எதிர்த்து வெல்வோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பதாவது:-


❖ அன்று, நேரடியாகப் போரிட்டு வெல்ல முடியாத ஆங்கிலேய ஆதிக்கவாதிகள் சூழ்ச்சியால்தான் சின்னமலையை வீழ்த்த முனைந்தார்கள்!

❖ இன்றோ, தமிழ்நாட்டுக்குள் நேரடியாக நுழைய முடியாத டெல்லி ஆதிக்கவாதிகள் ‘தொகுதி மறுவரையறை’ எனும் சதித் திட்டத்தால் நம்மை அரசியல் வலிமையற்றவர்களாக்க முனைகிறார்கள்.

❖ அன்று, சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான் ஒரு துரோகி. இன்றும் சில அடிமைகள் தங்கள் சுயநலத்துக்காகத் தாய்த்தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே RSS எஜமானர்களின் காலடியில் அடகு வைக்கின்றனர்.

❖ இந்த ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து #TNWillFightTNWillWin எனத் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்! #வெல்வோம்_ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர். மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன். 34 வது கோட்டத்திற்கு உட்பட்ட கார்பெட் தெருவில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார் உடன் மாமன்ற உறுப்பினர். ஈசன் இளங்கோ கோட்டச் செயலாளர். குணசேகரன் ஆகியோர் இருந்தனர்.

## தொகுதி மறுவரையறையால்

# தமிழ்நாட்டிற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்படும்!

### உத்திரப்பிரதேசத்திற்கு கூடுதல் தொகுதிகள்!

புதுடெல்லி, ஏப்.18–

மக்கள் தொகை படி, தொகுதி மறுவரையறை செய்யப்படுவதால் தமிழ்நாட்டிற்கு பெரும் இழப்பு ஏற்படும் என்பது புள்ளி விவர கணக்கின் படி தெரியவந்துள்ளது. அதேநேரத்தில் உத்தரபிரதேசத்திற்கு தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் ஹிந்துஸ்தான் டைம்ஸ் புள்ளி விவரங்கள் வெயிட்டுள்ளது.

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை, மக்கள் தொகையின் அடிபடையில் தொகுதி மறுவரையறை செய்து 850 ஆக உயர்த்த ஒன்றிய பாஜக அரசு முனைப்பு காட்டி வருகிறது. இதற்கு திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் நாடாளுன்றத்தில் குறைக்கப்படும் என்பதால், திமுக மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை உண்மையாக்கும் விதமாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆங்கில நாளிதழ் புள்ளி விவரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தமிழ்நாட்டிற்குதான் அதிகபடியான இழப்பு ஏற்படும் என்றும், உத்தர பிரதேசத்திற்கு கூடுதல் தொகுதிகள் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2011 மக்கள் தொகையின்படி, மக்களவைத் தொகுதிகள் 850ஆக உயர்த்தப்படும் போது மக்களவையில் தமிழ்நாட்டிற்கான பிரதிநிதித்துவம் 1.2 சதவீதம் குறைக்கப்படும்.

அதே நேரத்தில் உத்தரபிரதேசத்தின் பிரதிநிதிதுவம் 1.7 சதவீதம் உயரும் என்பதும் வெட்ட வெளிச்சமாக தெரிய வந்துள்ளது. அதாவது தற்போது தமிழ்நாட்டிற்கு 39 தொகுதிகள் உள்ள நிலையில், அது 51 ஆக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், சதவீதமாக பார்க்கும்போது மக்களவையில் தமிழ்நாட்டின் பங்கு 7.2 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைகிறது.

இதேபோல், கேரளாவில் 20ல் இருந்து 23–ஆக தொகுதிகள் உயர்த்தப்பட்டு, அதன் பங்கு 3.7ல் இருந்து 2.7 சதவீதமாகவும்,

ஆந்திரா, தெலுங்கானாவில் 42ல் இருந்து 59–ஆக உயர்த்தப்பட்டு, அதன் பங்கு 7.7ல் இருந்து 6.9 சதவீதமாகவும்,

ஒடிசாவில் 21–இல் இருந்து 29–ஆக உயர்த்தப்பட்டு 3.9ல் இருந்து 3.4 சதவீதமாக அதன் பங்கும் குறையும்.

அதே நேரத்தில் ஏற்கனவே, அதிக தொகுதிகள் உள்ள உத்தரபிரதேசத்தின் தொகுதிகள் 80ல் இருந்து 140 ஆக உயர்ந்து, அதன் பங்கும், 14.7 சதவீதத்தில் இருந்து 16.5 சதவீதமாக உயருகிறது.

பீகாருக்கு 7.4ல் இருந்து 8.6 சதவீதமாக உயர்ந்து 40 தொகுதியில் இருந்து 73 தொகுதியாக அதிகரிக்கப் பட உள்ளது.

ராஜஸ்தானின் தொகுதி 25ல் இருந்து 48ஆக அதிகரிக்கப்பட்டு, மக்களவையில் பங்கு 4.6ல் இருந்து 5.6 சதவீதமாகவும்,

29 தொகுதிகள் கொண்ட மத்திய பிரதேசத்திற்கு 51 தொகுதிகள் வழங்கப்பட்டு, அதன் பங்கு 5.3ல் இருந்து 6 சதவீதமாகவும்,

மகாராஷ்டிராவின் தொகுதி 48ல் இருந்து 79 ஆக உயர்த்தப்பட்டு, பங்கு 8.8ல் இருந்து 9.3 சதவீதமாகவும் உயர்த்தப்பட உள்ளது.

இதன்படி, வடமாநிலங்களின் பிரதிநிதித்துவம் மக்களவையில் 22.1ல் இருந்து 25.1 சதவீதமாக உயரும் நிலையில், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் 20.1ல் இருந்து 18 சதவீதமாக குறையும் என்பதும் இந்த புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

## நாமக்கல் கிழக்கு மாவட்டம் — நாமகிரிப்பேட்டை ஒன்றியம்

# இரா.புதுப்பட்டி பேரூரில் - மா.மதிவேந்தன் தீவிர வாக்கு சேகரிப்பு!

நாமக்கல், ஏப். 18-

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை இரா. புதுப்பட்டி பேரூரில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் மா. மதிவேந்தன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வரும் 23 ந் தேதி நடைபெறவுள்ள இந்த பிரச்சாரத்தில், “உதயசூரியன்” சின்னத்திற்கு ஆதரவு கோரி, வேட்பாளர் மா. மதிவேந்தன் பல்வேறு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் பொது மக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரித்தார்.

தொடர்ந்து, சத்தியா நகர், புதியார், பேருந்து நிலையம், முச்சிப்பள்ளி புதியார், மலைவாழ் காலனி, சக்தி நிலையம், பெருமாள் கோவில் தெரு, நீங்கலாங்காடு, வாணி கிணறு, எஸ்.பாறை மற்றும் ஆர்.பி.காட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்வில், ராசிபுரம் தனி தொகுதி தேர்தல் பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், இரா.புதுப்பட்டி பேரூர் செயலாளர் ஜெயக்குமார் மற்றும் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, திமுக வேட்பாளருக்கு உறுதுணையாக செயல்பட்டனர்.

## பகுதிச் செயலாளர் மதியழகன் தலைமையில் — கோவை

# இடையர்பாளையத்தில் கருப்புக் கொடியேற்றி மசோதாவுக்கு தீயிட்டனர்!

### மாமன்ற உறுப்பினர் சம்பத் — கழகத்தினர் பங்கேற்பு!

கோவை, ஏப். 18-

கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ. அ. ரவி ஆலோசனையின் பெயரில், கழகத் தலைவரின் அறிவுறுத்தலை ஏற்று , கழக நிர்வாகிகள் உடன்பிறப்புகள் தங்களது வீடுகளில் பொது இடங்களிலும் கருப்பு கொடிகளை ஏற்றி ஒன்றிய அரசின் தொகுதி மறு வரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து குரல் எழுப்பி கண்டனம் தெரிவித்தனர்.

மேலும் இடையர் பாளையத்தில் முத்தமிழ் மன்றத்திற்கு எதிரே பகுதி கழகச் செயலாளர் மதியழகன் தலைமையில், நிர்வாகிகள், உடன்பிறப்புகள், தோழமைக் கட்சியினர் , கருப்பு சட்டை அணிந்து மசோதா நகலை தீயிட்டுக் கொளுத்தினர்.

மோடியின் இந்த அரசியல் சட்டத்திற்கு எதிரான போக்கினை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தி முழக்கங்களை விண் அதிர எழுப்பினர்.

**வாக்கு சேகரிப்பு!**

பின்னர் நடைபெற்ற வாக்காளர் பிரச்சார அணி வகுப்பு கூட்டணிக் கட்சியினரின் நிர்வாகிகள் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பின் கவுண்டம்பாளையம் தொகுதியின் 29 வயதே ஆன இளம் வெற்றி வேட்பாளர் சூரிய பிரகாஷை ஆதரித்து பிரச்சார பயணம் ஆரம்பமாயிற்று.

இந்நிகழ்வில் இடையர் பாளையம் பகுதிக் கழகச் செயலாளர் மதியழகன், மாமன்ற உறுப்பினர் சம்பத், வட்டக் கழக செயலாளர்கள்

ஆர். குமரேசன், தம்பு என்ற கிருஷ்ணராஜ், ஆறுமுகம், தாஸ், ரஞ்சித், மைக்கேல், மற்றும் , மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர். சி. தியாகராஜன், பகுதி கழக துணைச் செயலாளர் கண்ணகி முருகானந்தம், முன்னாள் எம். சி நாகராஜ், பகுதி அவைத்தலைவர் சண்முகசுந்தரம்,

கழக மூத்த முன்னோடிகள் T. மணி, கா. பொன்னரசு, வட்ட துணைச் செயலாளர் குண சீலன், சலூன் பாலன், கொங்கு கட்சி மாவட்ட தலைவர் சுபாஷ், மதிமுக அவைத் தலைவர் அர்ஜுன் ராஜ், 35 ஆவது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன், கொங்கு மோகன் ராஜ், ஆனந்தன், காங்கிரஸ் ஈஸ்வரமூர்த்தி, கம்யூனிஸ்ட் துரை, ராமமூர்த்தி, கார்த்தி சந்திரசேகர் , சக்தி, பாண்டி, சம்பத், சித்ரா, தங்கவேல் மற்றும் BLA2 BLC, BDA, கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு, பட்டப் படிப்பு படித்த மண்ணின் மைந்தர் கவுண்டம்பாளையம் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் சூரிய பிரகாஷ் அவர்களை கைச்சின்னத்தில் வெற்றிபெற ஓய்வில்லாமல் பாடுபட்டனர்.

## கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர்

# த.சந்திரசேகரன் சகோதரர் த.ரெங்கராஜ் மறைவு!

### அமைச்சர் எஸ்,ரகுபதி - கே,கே,செல்லப்பாண்டியன்- – பெரியண்ணன் அரசு- எம்,பழனியாண்டி நேரில் அஞ்சலி!

புதுக்கோட்டை, ஏப்.18-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சி.தனக்கோடியார் பிள்ளை மகனும், தி.மு.க விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர், மாவட்ட கால்பந்து கழக துணைத் தலைவர் த.சந்திரசேகரன் அவர்களின் தம்பியும் ரெ. அரவிந்தன் அவர்களின் தகப்பனாரும் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் த.ரெங்கராஜ் 12.04.2008 அன்று இயற்கை எய்தினார்.

அவரது உடல் 13.04.2026 திங்கள்கிழமை காலை 10 மணியளவில் விராலி மலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு விராலிமலை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருக்கு வயது 61. இவருக்கு மனைவியும், 2 மகள்கள், 1 மகனும் உள்ளனர். இவரது திருமணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவர் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மறைவு செய்தி அறிந்ததும் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ். ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர். வைரமணி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, எம்.பழனியாண்டி, மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, சு.சண்முகம், செ. அசோக்பாண்டியன், செங்குறிச்சி கருப்பையா, மு.பி.மணி, எம்.எம்.பாலு, என்.சாத்தையா, கே.எஸ். சந்திரன், தென்னலூர் எம். பழனியப்பன், மு.பி.ம. சத்திய சிலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், கோவிந்தராஜன், ஆர். ஆர்.சாமிநாதன், எம்.செந்தில்குமார்,

மணப்பாறை நகர கழக செயலாளர் சரவணன் மலையாளம், க.நைனா முகம்மது, டாக்டர் செ. குறிஞ்சிவாணன், மலையூர் ராமசாமி, ராஜசேகரன், இராம.செல்வராஜ், எம்.வேலுச்சாமி, கணபதி, எம்.பி.சரவணன், டாக்டர் இளையராஜா, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், கனகம்மன் பாபு, காதர் கனி, ராஜசேகர பாண்டியன், ஆர்.டி. ராமசாமி, கவிஞர் பையா, வழக்கறிஞர் எம். சௌமாஆர்.எம்.கருப் பாலமுருகன், ரவீஸ் ரவி, எம்.ஆர்.அன்பழகன், விராலிமலை சிவா, வில்லியம்ஸ், நிஜாம் சத்யா, மணிவண்ணன், அறிவழகன் மற்றும் அனைத்துக் கட்சி நிர்வாகிகள், உறவினர்கள், நண்பர்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் எம்.பி.

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 19.4.2026 | திருப்பூர் வடக்கு | அவினாசி |
| | கோவை மாநகர் | கோவை தெற்கு |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-04-2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

ஏப்ரல் 18 (2005)



கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் — மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

ஏப்ரல் 18 (2019)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.

மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.